சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: திரு. வா. சுந்தரராஜ், எம்.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2023-ம் ஆண்டு ஜூன் திங்கள் 01-ம் நாள் வியாழக்கிழமை

இடை மனு எண். 01/2023

இன்

அசல் வழக்கு எண்.424/2020

...

விஜயகுமார் ..மனுதாரர்/2ம் வாதி

/எதிர்/

1) அமராவதி
2) பாண்டிக்கண்ணு
3) ஜெயக்கண்
4) நாகலிங்கம்
5) புனிதா
6) மீனாட்சி
7) மைனர் குருவிஷ்வா
(அவரது தாயார் மற்றும் பாதுகாவலர் மாலா மூலம்)
8) மைனர் தர்ஷன் விகாஸ்
(அவரது தாயார் மற்றும் பாதுகாவலர் மாலா மூலம்)
9) மைனர் ஹரிசிவா
(அவரது தாயார் மற்றும் பாதுகாவலர் ராஜேஸ்வரி க/பெ செந்தில்குமார் மூலம்)
10) மைனர் விஸ்வசூர்யா
(அவரது தாயார் மற்றும் பாதுகாவலர் கிறிஷ்டி கோகிலா மூலம்)

..பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக 26.04.2023-ம் தேதியன்று வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.G.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.செந்தில்ராஜா அவர்கள் ஆஜராகியும், 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் G.ஸ்ரீதரன் அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.மதன்மோகன் அவர்கள் ஆஜராகியும், 3, 4, 5 எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர்கள் ஆஜராகாததால் அவர்களை ஒருதலைபட்சமாக கருதியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டு இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

**1)** சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், உடையாரேந்தல் கிராமம் தற்சமயம் சிவகங்கை வட்டம், கூத்தாண்டன் அஞ்சல், அண்ணாமலை நகரில் வசிக்கும் நாகமுத்து மனைவி புனிதா என்பவருக்கு நீதிமன்ற அழைப்பாணை மூலம் புனிதா என்பவரின் ஆதார் அடையாள அட்டை, தனது தந்தை பெயரை நிரூபிக்கும் ஒரு ஆவணம் மற்றும் ஜாதியை நிரூபிக்கும் ஒரு ஆவணம் ஆகியவைகளை சமர்ப்பிக்கவும் மேற்படி வழக்கு பொறுத்து சாட்சியம் அளிக்கவும் உத்தரவிடக் கோரி மனுதாரர் தரப்பில் கட்டளை 12, விதி 18ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் : -**

தாவாசொத்து மனுதாரரின் தந்தை லேட்.அழகர் மற்றும் மனுதாரரின் தந்தையின் தாய்மாமன் லேட்.பிச்சை என்ற பிச்சையப்ப கோனாருக்கு பாத்தியப் பட்ட சொத்தாகும். தாவா வழக்கின் 6ம் பிரதிவாதியும் தனது கணவருடன் கூட்டுச் சேர்ந்து மனுதாரரின் கிராமமான உடைகுளத்தில் இல்லாத ஒரு நபரான 4ம் பிரதிவாதி நாகலிங்கம் என்பவரை மனுதாரரின் தந்தையின் வாரிசு என்றும், மனுதாரரின் தந்தையின் தாய்மாமனன் பிச்சப்பகோனின் வாரிசாக சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், உடையாரேந்தல் கிராமத்தில் உள்ள நாகமுத்து என்பவரின் மனைவியான 5ம் பிரதிவாதி புனிதா என்பவர் வேறு சமூகத்தைச் சேர்ந்த பெண் என்று தெரிந்தும் கூட்டு சதி செய்தும், ஆள்மாறாட்டம் செய்தும் போலி கிரையம் பெற்றுள்ளார். புனிதா என்பவர் தற்போது சிவகங்கை அண்ணாமலை நகரில் குடியிருந்து வருகிறார்.

மனுதாரர் 6ம் பிரதிவாதியின் குற்ற நடவடிக்கையின் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டி கடந்த 23.10.2020ம் தேதி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடத்தில் புகார் கொடுத்து மேற்படி புகாரின்பொருட்டு சிவகங்கை மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்களால் விசாரிக்கப்பட்டது. மேற்படி விசாரணையில் 6ம் பிரதிவாதி மீனாட்சி என்பவருக்கு சொத்துக்கு பாத்தியமில்லாத நபரான உடைகுளம் கிராமத்தில் வசிக்கும் லேட்.மு.அழகர் மகன் நாகலிங்கம் என்பவரும் உடையாரேந்தல் கிராமத்தில் வசிக்கும் வேறு சமூகத்தைச் சேர்ந்த நாகமுத்து மனைவி புனிதா என்பவர் தான் பிச்சப்பகோனாரின் ஒரே வாரிசு என்று கடந்த 17.02.2005ம் தேதி

சிவகங்கை இணை சார்பதிவாளர் எண் II அலுவலக ஆவண எண் 319/2005ன்படி பதிவு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்று விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார். 6ம் பிரதிவாதிக்கு 17.02.2005-ம் தேதி கிரையம் ஏற்படுத்திய நபர்களில் வேறு சமூகத்தைச் சேர்ந்த பெண்ணான சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், உடையாரேந்தல் கிராமம், தற்சமயம் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், கூத்தாண்டன் அஞ்சல், அண்ணாமலைநகர் என்ற முகவரியில் வசிக்கும் நாகமுத்து மனைவி புனிதா என்பவரை நீதிமன்ற அழைப்பாணை மூலம் வரவழைத்து அவரது ஜாதியை குறிப்பிடும் ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பித்தும் சாட்சியமளிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மனுதாரரின் மனுவை ஏற்று உத்தரவிட வேண்டும்.

**3) <u>6ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுதாரர் தனது அபிடவிட்டில் புனிதா என்பவர் வேறு சாதியைச்சேர்ந்தவர். ஆனால் தானும் ஒரு குறிப்பிட்ட சாதியை சேர்ந்தவர் என்ற அடிப்படையில் கிரையம் செய்துள்ளார் என மனுதாரரும் கடந்த 23.10.2020ம் தேதியன்று 6ம் எதிர்மனுதாரர் மீது சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரில் சிவங்கை மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்களால் நடத்தப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதன் அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பவேண்டும் என குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் எந்த ஒரு நபரையும் தனது சாதியை நிரூபிக்கும் வகையில் ஆவணத்தை கொண்டுவருமாறு நீதிமன்றத்தின் மூலமாக அழைப்பாணை அனுப்புவதற்கு உரிமை கோர முடியாது. மேலும் ஒரு நபரை கட்டாயப்படுத்தி சாட்சியம் அளிப்பதற்கு வருமாறு மனுதாரருக்கு தேவையான ஆவணங்களை எவ்வகையிலாவது நிரூபிக்கும் வகையில் மனு தாக்கல் செய்வதற்கும் சட்டப்படி எவ்வகையான உரிமையும் கிடையாது. மனுதாரரும் அண்ணாமலை நகர் என்பது பல ஆயிரம் மக்கள் குடியிருக்கும் பகுதி. அவ்வாறான நிலையில் எந்த தெருவில், எந்த பகுதியில் புனிதா என்பவர் வசித்து வருகிறார் என்ற விபரத்தினையும் தனது மனுவில் தெரிவிக்கவில்லை. மனுதாரரின் மனுவானது சட்டப்படி நிலைநிற்கத் தக்கதல்ல. எனவே மனுதாரரின் மனுவை 6ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

**5)** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6**) இவ்வழக்கின் 6ம் பிரதிவாதிக்கு 17.02.2005ம் தேதியன்று கிரையம் ஏற்படுத்தியதாக சொல்லப்படும் புனிதா என்பவரை விசாரிக்க அனுமதி கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் அவர்களது வழக்கை நிரூபிக்கவும் வாதிகள் கூறும் கூத்தாண்டன் அஞ்சல், அண்ணாமலை நகரில் வசிக்கும் நாகமுத்து மனைவி புனிதா என்பவரை விசாரிக்க அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமும், தீங்கும் ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே மனு அனுமதிக்கக்கூடியதாக உள்ளது.

**7**) முடிவாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 2023-ம் ஆண்டு ஜுன் திங்கள் 01-ம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
சிவகங்கை.

மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள்
மற்றும் சான்றாவணங்கள் - இல்லை-.

சார்பு நீதிபதி,
சிவகங்கை.

சார்பு நீதிமன்றம், சிவகங்கை
இ.ம.எண் 01/2023
இன்
மு.வ.எண்.424/2020
சீரான-வரைவு உத்தரவு
நாள். 01.06.2023